RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING  www.malaithanthi.in  மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 130 | மே.18 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# "ஆனைமங்கல செப்பேடுகள் சோழர்களின் பெருமையை பறைசாற்றுகின்றன" பிரதமர் மோடி பெருமிதம்

ஹேக் [நெதர்லாந்து]: மே.18-

நெதர்லாந்திலிருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க ஆனைமங்கல செப்பேடுகள் வெற்றிகரமாக மீட்கப்பட்டதை அடுத்து, 'இந்த செப்பேடுகள் சோழர்களின் பெருமையை பறைசாற்றுகின்றன. இந்தியர்களாகிய நாம், சோழர்களின் கலாச்சாரம், கடற்படைத் திறமை ஆகியவற்றால் மிகுந்த பெருமை கொள்கிறோம்" என பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமையன்று நெதர்லாந்தின் ஹேக் நகரில் நடைபெற்ற விழாவில், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நெதர்லாந்து பிரதமர் ராப் ஜெட்டன் ஆகியோர் முன்னிலையில் அதிகாரப்பூர்வமாக சோழர்கால ஆனைமங்கலம் செப்பேடுகள் திரும்ப ஒப்படைக்கப்பட்டன.

இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், "இந்தியர்கள் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான தருணம். 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர்கால செப்பேடுகள், நெதர்லாந்தில் இருந்து இந்தியாவிற்குத் திரும்பவும் கொண்டுவரப்பட இருக்கின்றன. இது தொடர்பான விழாவில் பிரதமர் ராப் ஜெட்டன் உடன் இணைந்து பங்கேற்றேன்.



சோழர் கால செப்பேடுகள், 21 பெரிய மற்றும் 3 சிறிய தகடுகளின் தொகுப்பாகும். இவற்றில் பெரும்பாலான எழுத்துக்கள் உலகின் மிகவும் அழகான மொழிகளுள் ஒன்றான தமிழில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை மாமன்னர் முதலாம் ராஜேந்திர சோழன் தனது தந்தை முதலாம் ராஜராஜனால் வாய்மொழியாக அளிக்கப்பட்ட வாக்குறுதியை முறைப்படுத்தியதை குறிக்கின்றன. மேலும், இவை சோழர்களின் பெருமையையும் பறைசாற்றுகின்றன. இந்தியர்களாகிய நாம், சோழர்களின் கலாச்சாரம், கடற்படைத் திறமை ஆகியவற்றால் மிகுந்த பெருமை கொள்கிறோம்.

நெதர்லாந்தில் லெய்டன் செப்பேடுகள் என்றும், இந்தியாவில் ஆனைமங்கலம் செப்பேடுகள் என்றும் அறியப்படும் இந்தப் பழங்கால செப்பேடுகளை மீட்டுக் கொண்டு வர, மத்திய அரசு 2012ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து முயற்சி செய்து வந்தது. சுமார் 30 கிலோகிராம் எடையுள்ள இந்த செப்பேடுகள், சோழப் பேரரசின் அதிகாரப்பூர்வ அரச முத்திரையைக் கொண்ட ஒரு பிரம்மாண்டமான வெண்கல வளையத்தால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளன.

நெதர்லாந்து அரசுக்கும், குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் இருந்து செப்பேடுகளைப் பாதுகாத்து வந்த லெய்டன் பல்கலைக்கழகத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த செப்பேடுகள், சோழர் கால அரசாட்சியின் மதச்சார்பற்ற கொள்கைகளுக்கு சான்றாக விளங்குகின்றன. ஒரு புத்த மடாலயத்தைப் பராமரிப்பதற்காக முதலாம் ராஜராஜ சோழன் அறக்கொடைகளை அளித்த தகவல்கள் இந்த செப்பேடுகளில் இடம்பெற்றுள்ளன.

## த.வெ.க.,வினர் 8 பேருக்கு நிபந்தனை முன்ஜாமீன்: ஐகோர்ட் உத்தரவு

சென்னை, மே.18-

தேர்தல் நேரத்தில் திமுகவினரை தாக்கியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் தவெகவைச் சேர்ந்த 8 பேருக்கு நிபந்தனை முன்ஜாமீன் வழங்கி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஏப்.23ம் தேதி நடந்த சட்டப்பேரவை தேர்தலின் போது, திருவல்லிக்கேணி சேப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட ராயப்பேட்டையில் திமுகவினர் வாக்காளர் சரிபார்ப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த தவெகவை சேர்ந்த ரதி, அவரது கணவர் பாஸ்கர், மகன் சூர்யா, கணவரின் தம்பி காந்தி மற்றும் தனுஷ், வாசுதேவன், கவுதமன், விக்னேஷ் ஆகிய 8 பேர் திமுகவினரை தாக்கி, மேஜை, நாற்காலிகளை சேதப் படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக, திமுகவைச் சேர்ந்த கே.வி.மோகன் என்பவர் ராயப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில், தவெகவைச் சேர்ந்த 8 பேர் மீதும் போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கில் தங்களுக்கு முன்ஜாமீன் வழங்கக் கோரி ரதி, பாஸ்கர் உள்ளிட்ட 8 பேரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு நீதிபதி பி.தனபால் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜி.மோகன கிருஷ்ணன், "ஏற்கனவே ஐஸ் ஹவுஸ் காவல் நிலையத்தில் திமுகவினர் மீது மனுதாரர் புகார் அளித்ததால், அதற்கு பழிவாங்கும் நோக்கில் திமுகவினர் ராயப்பேட்டை காவல் நிலையத்தில் மனுதாரர்களுக்கு எதிராக பொய் புகார் அளித்துள்ளனர்.

அந்த புகாரை ராயப்பேட்டை காவல் ஆய்வாளர் விசாரணை நடத்தி உண்மைத் தன்மையை ஆராயாமல் மனுதாரர்கள் மீது பொய் வழக்கைப் பதிவு செய்துள்ளார். மனுதாரர்கள் மீது இதற்கு முன்பாக எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்பதால் அனைவருக்கும் முன்ஜாமீன் வழங்க வேண்டும்" என வாதிட்டார்.

அதற்கு ஆட்சேபம் தெரிவித்து போலீஸார் தரப்பில் ஆஜரான குற்றவியல் வழக்கறிஞர் எஸ்.பாலாஜி வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, மனுதாரர்கள் ஏற்கனவே திமுகவினர் மீது புகார் அளித்ததால், அவர்களும் இவர்கள் மீது புகார் கொடுத்துள்ளனர். தேர்தல் பணி தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே பிரச்சினை இருந்துள்ளது. எனவே, இந்த வழக்கில் மனுதாரர்கள் 8 பேருக்கும் நிபந்தனை முன் ஜாமீன் வழங்கப்படுகிறது.

8 பேரும் சென்னை சைதாப்பேட்டை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ரூ.10 ஆயிரம் மதிப்பில் சொந்த ஜாமீன் மற்றும் அதே மதிப்பில் இரு நபர் ஜாமீனும் வழங்க வேண்டும். 4 வாரங்களுக்கு சனிக்கிழமை தோறும் ராயப்பேட்டை காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும். நீதிமன்ற முன் அனுமதி பெறாமல் வெளிநாடுகளுக்கு செல்லக் கூடாது என நீதிபதி நிபந்தனை களை விதித்தார்.

## டாஸ்மாக் பணியாளர்கள் மீது கூடுதல் செலவுச் சுமை: அரசுக்கு SPF சங்கம் கோரிக்கை

மதுரை, மே.18-

தமிழ்நாடு டாஸ்மாக் மேற்பார்வையாளர்கள் முன்னேற்ற சங்கம் (SPF) சார்பில், டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் ஊழியர்கள் தங்களது சொந்த ஊதியத்தில் இருந்து பல்வேறு செலவுகளை ஏற்க வேண்டிய நிலை இருப்பதாகக் கூறி அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களாகப் பணியாற்றினாலும், கடைகளை நடத்து வதற்கான அத்தியாவசிய செலவுகளுக்குக் கூட போதிய நிதி வழங்கப்படவில்லை என சங்கம் தெரிவித்துள்ளது. இதனால் பல செலவுகளை பணியாளர்களே நேரடியாகச் சந்தித்து வருவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பணியாளர்கள் ஏற்கும் முக்கிய செலவுகள்:

மதுபான சரக்குகளை இறக்குவதற்கான கூலி, பெட்டிகளில் குறைவாக வரும் மதுபாட்டில்களின் இழப்பு, கடைகளில் உடையும் பாட்டில்களுக்கான இழப்பீடு, அரசு வழங்கும் தொகையை மீறும் கூடுதல் கடை வாடகை, மதுக்கூட உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் தினசரி தொகை, உபரி மின்சாரக் கட்டணம், அலுவலகப் பயணத்திற்கான போக்குவரத்துச் செலவு, காலி பாட்டில் சேகரிப்புப் பணிக்கான தினசரி ஊதியம், மாதாந்திர அறிக்கை தயாரிப்பு செலவு, எழுதுபொருட்கள் மற்றும் அலுவலக பயன்பாட்டு செலவுகள்.

இந்தச் செலவுகள் அனைத்தும் ஊழியர்களின் தனிப்பட்ட வருமானத்தில் இருந்து மேற்கொள்ளப்படுவதாக சங்கம் தெரிவித்துள்ளது. பணிச்சுமை மற்றும் பொருளாதார சுமையை கருத்தில் கொண்டு அரசு உடனடி நடவடிக்கை எடுத்து, தேவையான நிதி மற்றும் அடிப்படை வசதிகளை வழங்க வேண்டும் என ஷிறிதி சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கையை மாநிலத் தலைவர் றி. கனகராஜ், மாநிலப் பொதுச்செயலாளர் ஷி. பாலமுருகன் மற்றும் மாநிலப் பொருளாளர் வி. ரவி ஆகியோர் கையொப்பமிட்டு அரசின் கவனத்திற்கு அனுப்பியுள்ளனர்.

## "அ.தி.மு.க., எம்.எல்.ஏ.க்களுக்கு அமைச்சர் பதவி கொடுத்தால் சிபிஐ வழக்கு பாயும்" த.வெ.க.,வுக்கு டிடிவி எச்சரிக்கை

சென்னை, மே.18-

"அதிமுகவிலிருந்து தவெகவுக்கு ஆதரவளித்தவர்களுக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டால், சிபு சோரன் வழக்கு போல கட்சித்தாவல் சட்டம் பாயும்." என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் எச்சரித்துள்ளார்.



திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன், "தமிழகத்தில் இந்தி திணிப்பை எதிர்த்து வருகிறோம். இன்று உலகமே ஒன்று என்ற சூழல் உருவாகிவிட்டது. தொழில்நுட்பம் பெரிய அளவில் வளர்ந்துவிட்டது. எனவே மூன்றாவது மொழியை படிப்பதில் தவறில்லை. இந்த தேர்தலில் மாற்றம் வேண்டும் என்ற பெயரில் வேட்பாளர் கூட யாரென்று தெரியாமல் தவெகவுக்கு வாக்களித்துவிட்டனர். நல்ல வேளை தவெகவுக்கு அறுதிப் பெரும்பான்மையை கொடுக்காமல் ஜனநாயகத்தை காப்பாற்றியுள்ளனர்.

வரும் தேர்தலில் ஜெயலலிதாவின் ஆட்சியை அமைக்க அவரின் தொண்டர்கள் பாடுபடுவோம். ஜெயலலிதா சொன்னதைப் போல எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும், எம்ஜிஆர் ஆரம்பித்த அதிமுகவை அழிக்க முடியாது. எம்ஜிஆர், ஜெயலலிதா காலம் தொட்டு கட்சிக்கு இதுபோன்ற பின்னடைவுகள் ஏற்படுவது வழக்கம். இந்த சோதனைகளை கடந்து வரும் மக்களவைத் தேர்தலில் அதிமுக மிகப்பெரிய வெற்றி பெறும்.

2006ல் விஜயகாந்த் அரசியலுக்கு வந்ததால், திமுக மைனாரிட்டி ஆட்சியமைத்தது. தவெகவை எதிர்த்து தான் காங்கிரஸ் 5 தொகுதிகளில் வெற்றிபெற்றது, அவர்கள் எப்படி இப்போது தவெகவை ஆதரிக்கிறார்கள். விசிக, இடதுசாரிகள் வெளியில் இருந்து தவெகவுக்கு ஆதரவு அளிக்கின்றனர். தவெக அரசு பெரும்பான்மை இல்லாமல் ஊசலாட்டத்தில் உள்ளதால் தான், அமமுகவின் எம்எல்ஏவை அபகரித்துள்ளனர்.

மன்னார்குடியில் அமமுக எம்எல்ஏ தவெகவையும் எதிர்த்து வெற்றிபெற்றவர். அவரின் ஆதரவை எப்படி தவெக பெறலாம். அதிமுகவை ஊழல் கட்சி என்றும், மற்றும் சிலர் என்றும் சொன்ன விஜய், எப்படி அதிமுகவின் 25 எம்எல்ஏக்களின் ஆதரவை பெறலாம். அதிமுகவிலிருந்து சென்று தவெகவை ஆதரிக்கிறார்கள். ஜெயலலிதா ஆட்சி வேண்டும் என்று சொல்பவர்கள், அதிமுகவை அழிக்க நினைக்கும் தவெகவை ஆதரிப்பது எப்படி நியாயமாக இருக்கும்.

நாங்கள் அதிமுக தலைமையிலான பாஜக கூட்டணியில் உள்ளோம். மன்னார்குடி எம்எல்ஏவுக்கு எதாவது தருவதாக சொல்லித்தானே தவெகவுக்கு அழைத்துள்ளீர்கள், அது குதிரை பேரம் தானே. அவருக்கு அமைச்சர் பதவி கொடுத்தால், உறுதியாக சிபிஐ விசாரணை கோருவோம். அதன்பின்னர் இந்த ஆட்சிக்கு கஷ்டகாலம் தான். இடதுசாரிகள், விசிக இன்னும் ஆறு மாதங்கள் தாங்குவார்களா?. எனவே தவெக ஆட்சியின் ஆயுள்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

அதிமுகவிலிருந்து தவெகவுக்கு ஆதரவு கொடுத்த 25 எம்எல்ஏக்களின் மீது கட்சித் தாவல் தடை சட்டம் பாய வாய்ப்புள்ளது. அதிமுக பொதுச்செயலாளரால் மட்டுமே கொறடாவை நியமிக்க முடியும் என்பது குறித்து பல நீதிமன்ற தீர்ப்புகள் உள்ளன. சபாநாயகரால் இன்னும் எத்தனை நாட்கள் காலம் தாழ்த்த முடியும், அதற்கும் காலக்கெடு உள்ளது. பழனிசாமி தரப்பு நீதிமன்றம் சென்றால் எல்லாம் வெட்டவெளிச்சமாகி விடும்.

அதிமுகவிலிருந்து தவெகவுக்கு ஆதரவளித்தவர்களுக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டால், சிபு சோரன் வழக்கு போல கட்சித்தாவல் சட்டம் பாயும். தவெக அமைச்சர்கள் பற்றி வெளியாகியுள்ள குற்றச்சாட்டுகள் அதிர்ச்சியளிக்கிறது. ரீல்ஸை நம்பி மட்டும் ஆட்சி நடத்த முடியாது.

ஜெயலலிதாவின் ஆட்சியமைக்க, ஜெயலலிதாவின் தொண்டர்கள் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும். மனவருத்தங்கள் இருந்தால் பேசித் தீர்க்க வேண்டும். தவெக அதிமுகவை, ஜெயலலிதாவின் இயக்கத்தை அழிக்கப் பார்க்கிறது. அதனை தனிப்பட்ட கோபதாபங்களுக்காக விட்டுக்கொடுக்க கூடாது. அதிமுகவிலிருந்து தவெகவுக்கு ஆதரவு கொடுக்கும் நண்பர்கள் உண்மையை புரிந்துக் கொள்ள வேண்டும்.

திமுக 10 ஆண்டுகள் ஆட்சியில் இல்லாமல் இருந்தது. அதுபோல அதிமுக தலைவர்களும் பொறுமை காக்க வேண்டும். எனவே அதிமுக தொண்டர்கள் பெயரை சொல்லி தவெகவுக்கு ஆதரவு கொடுத்தால் வரலாறு அவர்களை மன்னிக்காது. எம்ஜிஆர் தொடங்கிய, ஜெயலலிதா கட்டிக்காத்த இயக்கத்தை விஜய் அழிக்கப்பார்க்கிறார் என்பதே உண்மை. அதற்கு யாரும் பலியாக வேண்டாம். சட்டப்படி பழனிசாமி தான் பொதுச் செயலாளர், அவருக்கு தான் அனைத்து அதிகாரங்களும் உள்ளது.

சட்டைப்பையில் ஜெயலலிதா படத்தை வைத்துக்கொண்டு, அதிமுகவையும், அமமுகவையும் அழிக்க, தவெகவுக்கு ஏஜெண்டாக செயல்படுகிறார். அவர் பழனிசாமியை பார்த்து அம்மாவின் ஆத்மா மன்னிக்காது என்று சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாது. ஜெயலலிதாவின் ஆத்மா செங்கோட்டையனை மன்னிக்காது" என்றார்.


## சிதம்பரம் பேருந்து நிலைய கட்டுமான பணியை விரைந்து முடிக்க வேண்டும்: பொதுமக்கள் எதிர்பார்ப்பு

கடலூர், மே.18-

கடலூர் மாவட்டம் சிதம்பரம் பழைய பேருந்து நிலைய கட்டிடம் கட்டப்பட்டு 45 ஆண்டுகளுக்கு மேலானதால், அது முற்றிலும் பழுதடைந்து காணப்பட்டது. மேலும் கடந்த காலங்களில் கட்டிடத்தின் சிமெண்ட் காரைகள் பெயர்ந்து விழுந்து பயணிகள் பலர் காயமடைந்தனர். அதனைத் தொடந்து ஆபத்தான நிலையில் இருந்த இக்கட்டிடத்தை இடித்துவிட்டு, புதிய பேருந்து நிலைய வளாகம் அமைக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் பயணிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

அதனை அடுத்து பயணிகளின் வசதிக்காக ரூ.5 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலைய நிழற்குடை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டன. மேலும் பல்வேறு காரணங்களால் தற்போது இந்த கட்டுமான பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதனால், பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்வதில் கடுமையான கூட்ட நெரிசல் ஏற்பட்டு, பள்ளி, கல்லூரி மாணவர்கள், பெண்கள் மற்றும் முதியவர்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் நலன் கருதி, பேருந்து நிலைய கட்டுமான பணியை மழை காலம் வருவதற்குள் விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர்.



## வருடத்திற்கு ஒருமுறை மலையிலிருந்து இறங்கி வரும் பழனி முருகன்

முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் அதிகமான பக்தர்கள் வந்து செல்லுமண கோவிலாக இருப்பது பழநி முருகன் கோவில். பழனி முருகன் கோவில் பற்றி பலரும் அறியாத வழிபாட்டு முறைகள், சடங்குகள், அதிசயங்கள் ஏராளம் உள்ளது. அப்படி பலருக்கும் தெரியாத ஒரு விஷயம் தான் வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் மிக முக்கியமான நிகழ்விற்காக பழனி முருகன், மலை மீது இருந்து கீழே இறங்கி வரும் நிகழ்வு. இந்த ஒரு நாள் தவிர, மற்ற நாட்களில் அவர் மலையில் இருந்து இறங்கி வருவது கிடையாது.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஆன்மீக மகத்துவம் நிறைந்த மூன்றாம் படை வீடு , பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில். மதுரை யிலிருந்து மேற்கே சுமார் 115 கி.மீ தொலைவில் அமைந்துள்ள இந்தத் திருத்தலம், பக்தர்களின் மனதை ஆழமாகத் தொடும் ஆன்மிகத் தலமாகும்.

"பழம் நீ" ஆன கதை :

ஒரு நாள் சிவபெருமான் தனது இரு மகன்களான விநாயகருக்கும் முருகனுக்கும் ஞானப்பழத்தை அளிக்க முனைந்தார். உலகை முதலில் சுற்றி வருபவருக்கே அந்தப் பழம் என்று கூறப்பட்டது. முருகன் உடனே மயிலில் ஏறி உலகைச் சுற்றச் சென்றார். ஆனால் விநாயகர் தன் பெற்றோர்களையே உலகமாகக் கருதி அவர்களைச் சுற்றினார். இதனால் ஞானப்பழம் விநாயகருக்குக் கிடைத்தது. இதைக் கேட்ட முருகன் மனமுடைந்து, அனைத்தையும் துறந்து இந்தப் பழநி மலையில் வந்து தவமிருந்தார். அப்போது சிவபெருமான் கூறிய வார்த்தை, "பழம் நீ" ஷ நீயே ஞானம், நீயே பலன். அதுவே "பழம் நீ" என்றும், "பழநி" என்றும் மாறியது.

இடும்பனும் காவடியின் தோற்றமும் :

பழநியின் வரலாற்றில் இடும்பனின் பங்கு மிக முக்கியமானது. அகத்திய முனிவரின் உத்தரவின்படி, இடும்பன் சிவகிரி மற்றும் சக்திகிரி எனும் இரண்டு மலைகளை காவடி தடியில் சுமந்து கொண்டு வந்தார். அந்த மலைகளை இறக்கி வைத்த இடமே இன்றைய பழநி. பின்னர் முருகன் சிறுவனாக வந்து இடும்பனைச் சோதித்து, அவனை வீழ்த்தி பின்னர் உயிர்ப்பித்து வரம் அளித்தார். அதன் பிறகு காவடி எடுத்தல் முருக வழிபாட்டின் முக்கிய அம்சமாக மாறியது.

நவபாஷாணத்தின் அதிசயம் :

இங்குள்ள முருகப்பெருமான் சிலை, சித்தர் போகரால் உருவாக்கப்பட்ட நவபாஷாண சிலை ஆகும். ஒன்பது நச்சுப் பொருட்கள் சேர்த்து உருவாக்கப்பட்ட இந்தச் சிலை, தெய்வீக மருந்து சக்தி கொண்டதாக கருதப்படுகிறது.இரவு முழுவதும் சந்தனக்காப்பு பூசப்பட்டு, காலையில் அது பக்தர்களுக்கு வழங்கப்படும். அந்தச் சந்தனம் உடல்நலத்திற்கு மிகச் சிறந்ததாக நம்பப்படுகிறது.

சரவணப் பொய்கை :

மற்ற முருகத் தலங்களைப் போல அல்லாமல், பழநியில் சரவணப் பொய்கை மலையின் மேல் இல்லை. அது அடிவாரத்தில் உள்ள திருஆவினங்குடி கோயில் பகுதியில் அமைந்துள்ளது. இது மிகப் பெரிய ஆன்மிக ரகசியங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. பழநி மலையை அடைய 690 படிகள் ஏற வேண்டும். குடும்பத்தோடு இந்தப் படிகளை ஏறி முருகனை தரிசிப்பது, குடும்பத்தில் செழிப்பு தரும் என்று பக்தர்கள் நம்புகின்றனர்.

மலையிலிருந்து இறங்கும் முருகன் :

பழநியில் நடைபெறும் மிகச் சிறப்பான விழாக்களில் ஒன்று, கந்த சஷ்டி. இந்த நாளில் மட்டும் முருகப்பெருமான் மலையிலிருந்து இறங்கி வந்து, சூரபத்மனை சம்ஹாரம் செய்கிறார் என்ற ஐதீகம் உள்ளது. பிறகு மீண்டும் மலையின் உச்சிக்கு திரும்புகிறார். இந்த நிகழ்வு பக்தர்களுக்கு நேரடியாகத் தெய்வ அனுபவமாக உணரப்படுகிறது.

## விஷ்ணுபதி புண்ணிய காலம்... வேண்டுதல்கள் நிறைவேற இதை மட்டும் பண்ணுங்க

விஷ்ணுபதி புண்ணிய காலம் என்பது தவற விடக்கூடாத மிக முக்கியமான காலமாகும். நம்முடைய வேண்டுதல்கள் அனைத்தும் நிறைவேற, பெருமாளை வேண்டிக் கொள்ள வேண்டிய காலமாகும். விஷ்ணுபதி புண்ணிய காலத்தில் பெருமாளுக்கு விருப்பமான விஷயங்களை செய்தாலே அவரது அருளை பெற்று விடலாம். விஷ்ணுபதி புண்ணிய காலத்தில் என்ன செய்ய வேண்டும், என்ன மந்திரம் சொல்லி, எப்படி வழிபட வேண்டும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

விஷ்ணுபதி புண்ணிய காலம்?

விஷ்ணுபதி புண்ணிய காலம் என்பது மிகவும் பெருமாளின் அருளை பெறுவதற்குரிய மிகப் புண்ணியமான காலமாகும். விஷ்ணுபதி புண்ணிய காலம் என்பது வருடத்திற்கு நான்கு முறை மட்டுமே வரும். வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி இந்த நான்கு மாதங்களின் முதல் தேதியில் தான் இந்த விஷ்ணுபதி புண்ணிய காலம் என சொல்கிறோம். பொதுவாக சூரிய பகவான் ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு தனது பயணத்தை மாற்றும் நாளைத் தான் மாதப்பிறப்பு என்கிறோம். அப்படி 12 ராசிகளில் குறிப்பிட்ட நான்கு ராசிகளுக்குள் சூரியன் பிரவேசிக்க துவங்கும் நாளில் வரும், குறிப்பிட்ட நேரத்தையே விஷ்ணுபதி புண்ணிய காலம் என்கிறோம். அதாவது, ரிஷபம், கும்பம், விருச்சிகம், சிம்மம் ஆகிய நான்கு ராசிகளுக்குள் சூரிய பகவான் பயணம் செய்ய துவங்கும், மாதத்தின் முதல் நாளில் வருவது தான் விஷ்ணுபதி புண்ணிய காலம்.

எப்போது வரும்?

விஷ்ணுபதி புண்ணிய காலத்தில் விரதம் இருந்து, பெருமாளை மனதார வேண்டுவது பல ஏகாதசி விரதங்கள் இருந்த புண்ணிய பலனை தரும் என சொல்லப்படுகிறது. வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி ஆகிய நான்கு மாதங்களின் முதல் தேதி அன்று கிட்டதட்ட 11 மணி நேரம் இந்த விஷ்ணுபதி புண்ணிய காலம் நீடித்திருக்கும். இந்த நேரத்தில் பெருமாளிடம் மனதார என்ன வேண்டிக் கொண்டாலும் அது அப்படியே நடக்கும் என்பது நம்பிக்கை. 2026ம் ஆண்டின் 2வது விஷ்ணுபதி புண்ணிய காலம் மே 15ம் தேதி வெள்ளிக்கிழமையான இன்று அமைந்துள்ளது. இன்று அதிகாலை 01.03 மணிக்கு துவங்கி, காலை 10.13 வரை விஷ்ணுபதி புண்ணிய காலம் உள்ளது.

என்ன செய்ய வேண்டும்?

விஷ்ணுபதி புண்ணிய காலத்தில் அருகில் இருக்கும் பெருமாள் கோவிலுக்கு சென்று கொடிமரத்தை வணங்கி விட்டு, பெருமாளை வணங்க வேண்டும். பிறகு கையில் 27 பூக்களை வைத்துக் கொண்டு, பிரகாரத்தை 27 முறை சுற்றி வர வேண்டும். ஒவ்வொரு முறை சுற்றி வரும் போதும் ஒவ்வொரு பூவாக கொடிமரத்திற்கு முன் வைக்க வேண்டும். இது 27 முறை சரியாக சுற்றி வந்த கணக்கு வைப்பதற்காக செய்கிறோம். இதில் 27 என்ற எண்ணிக்கை, 27 நட்சத்திரங்களையும் 9 கோள்களையும் குறிப்பதாகும். அதாவது, "27 நட்சத்திரங்களில் நான் எந்த நட்சத்திரத்தில் பிறந்து இருந்தாலும், 9 கிரகங்களில் எந்த கிரகம் என்னுடைய துன்பத்திற்கு காரணமாக இருந்தாலும், அந்த துன்பங்கள், பாவங்கள், கர்மவினைகளில் இருந்து விடுவித்து, எனக்கு அருள் செய்ய வேண்டும்" என நாம் வேண்டிக் கொள்வதாக அர்த்தம்.

சொல்ல வேண்டிய மந்திரங்கள் :

கொடிமரத்துடன் சேர்த்து கோவிலை 27 முறை சுற்றி வந்த பிறகு, உங்களின் வேண்டுதலை பெருமாளிடம் சொல்லி வேண்டிக் கொள்ளுங்கள். பிறகு, சிறிது நேரம் அமைதியாக சிறிது நேரம் கோவிலில் அமர்ந்து விட்டு வரலாம். இந்த நாளில் யாருக்காவது, நம்மால் முடிந்த தானம் வழங்குவது பெரிய புண்ணியத்தை தரும். விஷ்ணுபதி புண்ணிய காலம் வரும் நாளில்,

"ஓம் நாராயணாய வித்மஹே
வாசுதேவாய தீமஹி
தந்நோ விஷ்ணு ப்ரசோதயாத்"

என்ற மந்திரத்தை எத்தனை முறை முடியுமோ அத்தனை முறை சொல்லலாம். கோவிலை சுற்றி வரும் போதும் இந்த மந்திரத்தை உச்சரித்த படி சுற்றி வருவது நல்லது. இந்த நாளில் விஷ்ணு சகஸ்ரநாமம், விஷ்ணு ஸ்லோகங்கள் ஆகியவற்றையும் படிப்பது நல்லது.

## முட்செடிகளை பட்சிக்கும் அக்கினி!

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

இஸ்ரவேலின் ஒளியானவர் அக்கினியும். அதின் பரிசுத்தர் அக்கினி ஜுவாலையுமாகி. ஒரேநாளிலே அவனுடைய முட்செடிகளையும். நெரிஞ்சில்களையும் தகித்துப் பட்சித்தது'. தோட்டக்காரன் ஒருவன். ஒரு நல்ல நிலத்தை வாங்கி. தான் விரும்பின கனிகளை கொடுக்கும் விதைகளை அதில் நட்டான். செடிகள் வளர்ந்து வரும்போதே. அதனோடு முட்செடிகளும். களைகளும் சேர்ந்து வளர ஆரம்பித்தது. தோட்டக்காரன் வந்து, தோட்டத்தைப் பார்த்தபோது. இதோ அதில் முட்செடிகளும் நெரிஞ்சல்களும் வளர்ந்து, தோட்டக்காரன் விதைத்த விதைகள் வளர்ந்து பயன்கொடுக்கக் கூடாதபடிக்கு அதை நெருக்கிக் கொண்டிருந்தது. உடனே தோட்டக்காரன், சற்றும் தாமதிக்காமல் தீவிரமாய் அதை (களைகளை) சுத்தம் பண்ணினார்.

இன்றைக்கு தேவன் விதைத்த தரிசனங்கள் விளைந்து பலன் கொடுக்கக் கூடாதபடிக்கு, உங்கள் வாழ்க்கையில் இருக்கிற முட்செடிகளையும், களைகளையும் தேவன் பட்சிப்பார். முட்செடியாய் வளர்ந்திருப்பது எந்த செடியாய் வேண்டுமானால் இருக்கலாம். உங்கள் சுபாவங்கள் கோபம். பகை, பொறாமை, வெறுப்பு) உலக இச்சைகள், பொருளாசைகள். உலகக் கவலைகள். இவையெல்லாம் தேவையில்லாத களைகளாய் வளர்ந்து விதைக்கப்பட்ட தரிசனம் வளரக்கூடாதபடிக்கு தடை பண்ணிக் கொண்டிருக்கிறது. இஸ்ரவேலின் தேவன், அக்கினியானவர். உங்கள் தரிசனத்திற்கு தடையாய் இருக்கிற முட்செடிகளையும், களைகளையும் பட்சித்துப் போட ஆயத்தமாயிருக்கிறார். அவருடைய ஏக்கம் எல்லாம் உங்கள் இருதயமாகிய நிலத்தில் அவர் விதைத்த தரிசனங்கள் வளர்ந்து பலன் கொடுக்க வேண்டும் என்பதே.

பலிபீடத்தில் அக்கினி இறங்க வேண்டுமானால் பலி செலுத்தப்படுகிற காரியம் பலி பீடத்தின்மேல் வைக்கப்பட வேண்டும். தேவன் உணர்த்துகிற. விட்டுவிட சொல்லுகிற காரியங்களை பலிபீடத்தில் வை, அவருடைய அக்கினி பட்சித்துப் போடும்.

சகோதரி: நான்சி பிரபா, மாறாநாதா, கந்தமல்லி

## விசுவாசிகள் பயனுள்ள முறையில் பலிபூசையில் பங்கு பெறும் விதம்.

பூசையில் பங்கு பெறும்போது நாம் நான்கு காரியங்களைச் செய்ய வேண்டும்.

1. ஒரு குறிப்பிட்ட நாளில், நம் ஆண்டவரின் வாழ்வில் காணப்படும் ஒரு நிகழ்ச்சி, அல்லது அந்த நாளில் நினைவுகூரப்படுகிற அர்ச்சிஷ்டவரின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சியின் வரலாற்று அமைப்பை ரூபிகரித்துக் கொள்ளுங்கள். இவ்வாறு செய்வதால் உடுப்புகள், பாடல்கள், பிரவேச வாக்கியம், நிரூபம் மற்றும் சுவிசேஷம் போன்ற, மாறுபட்ட அம்சங்களோடு கூடிய ஞானஸ்நான ஆயத்தக்காரர்களுக்கான பூசையிலிருந்து ஏராளமான உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. அன்றைய நாளில் நினைவுகூரப் படுகிற நம் இரட்சகரின் வாழ்வில் நடந்த சம்பவத்தை, அல்லது அன்றைய புனிதர் கிறிஸ்து நாதரிடம் கண்டு பாவித்த புண்ணியச் செயல்களை, சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்திற்காக அவருக்கு ஒப்புக்கொடுங்கள். பூசையின் பலிப்பாகத்தில் இது செய்யப் பட வேண்டும். சர்வேசுரனது கோபத்தைத் தணித்து, நமக்குத் தேவ வரப்பிரசாதத்தைக் கொண்டு வருகிற இந்த ஒப்புக்கொடுத்தலைச் செய்யாமல், திவ்ய நன்மை வாங்குவது தகுதியானதல்ல.

3. கிறிஸ்துநாதருடையவும், அவருடைய அர்ச்சிஷ்டவர்களுடையவும் பேறுபலன்கள் மற்றும் பரிந்துரைகளின் வழியாக, அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தபோது பெற்றுக்கொண்ட வரப்பிரசாதங்களை சர்வேசுரனிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். (இதை பரலோக மந்திரம் சொல்லும்போது செய்ய வேண்டும்.)

4. ஒவ்வொரு பூசையிலும் அந்தரங்கமான முறையில், அல்லது ஞான முறையில் பங்கு பெறுவதற்கான இந்த மூன்று வழிமுறைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இவற்றோடு, சூழ்நிலைகளுக்குத் தக்கபடி, வெளிபரங்கமான முறையில் பங்கு பெறும் முறைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அவற்றில் குருவோடு வழிபாட்டு ஜெபங்களை வாசிப்பது, பொதுப் பாடல்களையும், பாடற்பூசைகளில் கிரகோரியன் பாடல்களையும் பாடுவது, ஜெபப் பூசையில் பதில்களைச் சத்தமாகக் கூறுவது, இவை எல்லாவற்றிற்கும் மேலாக, பூசையின் போது குருவுடன் சேர்ந்து திவ்ய நன்மை உட்கொள்வது ஆகியவை அடங்கும். இம்முறையில், அர்ச். பத்தாம் பத்திநாதர் விரும்பியது போல, உண்மையான கிறிஸ்தவ உணர்வு, அதன் மூலாதாரமாகிய பூசையிலிருந்து அபரிமிதமாகவும், புத்தம்புதியதாகவும் நம் பெருவெள்ளமெனப் பொழியப்படுகிறது.

பூசையின் சில குறிப்பிட்ட ஜெபங்கள் குருவானவரால் மாத்திரமே சொல்லப்பட வேண்டியவை. விசுவாசிகள் அவற்றைச் சத்தமாகச் சொல்லக் கூடாது. ஆனால் செயல் முறையில் அல்லாமல், இந்த ஜெபங்களின் வெளிப்படுகிற சிந்தனைகளை வணக்கத்தோடும், ஆழ்ந்த தியானிப்புடன் மூலம் நாம் இந்தப் பகுதிகளையும் நமக்குரிய ஜெபங்களாக மாற்றிக் கொள்ள முடியும்.

பூசையின் மற்ற பாகங்கள் தொடக்கத்திலும், இப்போதும் கூட மக்களால் சொல்லப்படக்கூடியவையாக இருக்கின்றன. அவை இரண்டு வகைப்படும். பாடற் பூசையில் பூசையில் பங்கு பெறுவோரால் பாடப் படுகிற பகுதிகள் ஒரு வகை; நம் சார்பாக பூசை நிறைவேற்றும் குருவாலோ, அல்லது பீடப் பரிசாரகராலோ கூறப் படுகிற பகுதிகள் மற்றொரு வகை.

பூசை சார்ந்த மிளவுகலின் முதல் நிலை, பரிசாரகரோடு சத்தமாகப் பதில் சொல்வதை உள்ளடக்கியதாகும். மிஸ்ஸா ரெச்சித்தாத்தா என்ற பெயரால் முறையாகக் குறிப்பிடப் படத் தகுதியுள்ள இரண்டாம் நிலையில் விசுவாசிகள் பாடற்பூசைகளில் குருவானவருடன் சேர்ந்து ஜெபங்களைச் சொல்கிறார்கள், (அல்லது பாடுகிறார்கள்). இந்த இரண்டாம் நிலையில் க்ளோரியா, க்ரேதோ (பாத்ரெம் ஓம்னிபொத்தேந்தெம். . .), சாங்க்த்துஸ், மற்றும் ஆஞ்ஞுஸ் தேயி ஆகியவை அடங்கும்.

திவ்ய நன்மை வாங்குவதற்கு முன்பாக, பரிசாரகருடன் சேர்ந்து சொல்லும் கொன்ஃபித்தேயோர் மட்டுமின்றி, குருவானவர் நம் சார்பாகச் சொல்லுகிற தோமினே நோன் சும் ஜெபமும் அவருடன் மூன்று முறைகள் சொல்லப் படலாம்.

இம்முறையில் பூசையில் பங்கெடுப்பது திவ்ய நன்மை வாங்குவதற்கான மிகச் சரியான ஆயத்தமாக இருக்கிறது. ஏனென்றால் பாப்பரசரும், மேற்றிராணிமார்களும் மற்றும் அனைத்து குருக்களும் எப்போதெல்லாம் பூசை நிறைவேற்றுகிறார்களோ, அப்போதெல்லாம் திருச்சபையானது இந்த ஒரே விதமான ஆயத்த முறையையே அவர்கள் மேல் சுமத்துகிறது. இது (பிரவேச வாக்கியத்திலிருந்து சபைச் செபம் வரை) ஆத்துமத்தில் உத்தம மனஸ்தாப உணர்வையும், (சபைச் செபம் முதல் விசுவாசப் பிரமாணம் வரையிலும்) விசுவாச உணர்வையும், (பூசையின் பலிப்பாகத்தில்) தேவ நம்பிக்கை உணர்வையும், (திவ்ய நன்மை வாங்கும் போது) தேவ சிநேக உணர்வையும், திரு இரத்தப் பாத்திர சுத்திகரம் முதல் பூசை முடிவு வரை) நன்றியுணர்வையும் வளர்க்கிறது. திவ்ய நன்மை பலனுள்ள முறையில் உட்கொள்ளப் படுவதற்கு இந்த உணர்வுகள் இன்றியமையாதவை. இத்தகைய ஆயத்தத்தின் மூலமாக, திவ்ய நன்மை உட்கொள்வது பூசையில் பங்குபெறும் செயல்பாடுகளில் எல்லாம் மிகச் சிறந்ததாக இருக்கிறது. இந்த ஆயத்தமானது திவ்ய நன்மை வாங்குவதன் முழுப் பலன்களையும் நமக்குப் பெற்றுத் தருகிறது. ஏனென்றால் திவ்ய நன்மை வாங்குதற்குக் கவனமான முறையில் ஆயத்தம் செய்வதும், இந்த மகா பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்தைப் பெற்றுக் கொண்டதற்கான முறையான நன்றியறிதலும்தான், திவ்ய நன்மை வாங்குவதால் ஏற்படும் நல்ல விளைவுகளை அபரிமிதமான முறையில் பெற்றுக் கொள்ளும் முறையாகும் என்று அர்ச். பத்தாம் பத்திநாதர் கூறினார். அவரது இந்த ஆணையின் மூலம் நமக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மிக உன்னதமான முறையில் செயல்படுத்துகிற முறைகளில் ஒன்றாக இந்த ஆயத்த முறை விளங்குகிறது.



## இறைவனை நாட...

சில மதங்களில் இறைவனை நாடுவதற்கும், அவனிடம் தேவைகளை கேட்டுப் பெறுவதற்கும் குட்டி தெய்வங்களை வைத்துக் கொண்டுள்ளார்கள்; இறந்தவர்களின் அடக்கஸ்தலங்களை நாடுகிறார்கள்; சிலைகளுக்கு பலவகையான நைவேத்தியங்களை வைக்கிறார்கள். அதற்கு அவர்கள் கூறுவதெல்லாம், 'நாம் வல்லமை பொருந்திய இறைவனை நேராக நாட முடியாது; எனவே, அவனுக்கு நெருக்கமானவர்கள் ஊடாகவே நாடுவதுதான் அதிக பயன்களைப் பெற சிறந்த வழி' என்பதாகும்.

இஸ்லாம் இக்கருத்தை ஏற்பதில்லை. காரணம் இஸ்லாத்தில் குருத்துவ அமைப்பு இல்லை. அல்லாஹ்வுக்கும் அவனது அடியானுக்கும் இடையில் ஒரு தரகர் முறையை ஏற்படுத்தி வைக்கவில்லை. மாண்டவர்களின் அடக்கஸ்தலங்களில் போய் முறையிடுவதையோ, அவர்களுக்கு நைவேத்தியங்கள் வைத்து அவர்கள் ஊடாக அல்லாஹ்வை நாடுவதையோ அங்கீகரிக்கவில்லை.

அல்லாஹ், தன்னிடம் இப்படிப் பிரார்த்தனை புரியும்படி நமக்குக் கற்றுத் தருகிறான்: "(யாஅல்லாஹ்) உனக்கே நாங்கள் அடிபணிகிறோம். மேலும் உன்னிடமே நாங்கள் உதவி கேட்கிறோம்." (அல்குர்ஆன்: 1:4)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

"நாம் மனிதனைப் படைத்தோம். அவனது உள்ளத்தில் எழுகின்ற ஊசலாட்டங்களைக் கூட நாம் அறிகின்றோம். அவனது பிடரி நரம்பை விடவும் அதிகமாக நாம் அவனிடம் நெருக்கமாக இருக்கின்றோம்." (அல்குர்ஆன்: 50:16)

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

'உங்கள் செருப்பின் வார் அறுந்தாலும் அல்லாஹ்விடம் கேளுங்கள்' (ஆதாரம்: புகாரி)

இவற்றிலிருந்து எதையும் நேரடியாக அல்லாஹ்விடம் கேட்க வேண்டும் என்பதையே இஸ்லாம் வலியுறுத்துகிறது என்பதைப் பார்க்கின்றோம். இது ஒரு வகையில் மனிதனுக்குத் தரப்பட்ட கௌரவம் என்று நாம் கருத வேண்டும்.

மனிதன் எல்லாக் காலங்களிலும், மற்றொரு மனிதனுக்கோ, இயற்கை சக்திகளுக்கோ, அல்லது பணம், பொருள், அற்புதங்கள் என்பனவற்றுக்கோ அடிமைப்பட்டு வாழ்ந்து வந்திருக்கின்றான். அதன் விளைவாக, அவன் அவற்றிடம் நேரடியாகவே தன் பிரார்த்தனைகளைச் சமர்ப்பித்தான். அல்லது அவற்றின் ஊடாக இறைவனிடம் பிரார்த்தனை புரியும் வழிமுறையைக் கைக்கொண்டான்.

இஸ்லாம் இந்த வழிமுறைகளைத் தகர்த்தெறிந்துவிட்டு அனைவரும் தம் தேவைகளுக்காக அல்லாஹ்வை நேரடியாக பிரார்த்திக்கும்படி செய்து விட்டது. இதன் மூலம் மனிதன் தன்னைப் படைத்த அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே அடிமை என்ற உணர்வை ஏற்படுத்தி வைத்ததுடன் அவனுக்கு சுய கௌரவத்தையும் வழங்கியது.

இதுவரை எடுத்து வைத்த கருத்துகளிலிருந்துஞ்.

– அல்லாஹ் ஒருவன்.
– அவனுக்கு இணை இல்லை.
– அவனே வணக்கத்திற்கு உரியவன்.
– அவனன்றி வேறு யாருக்கும் நைவேத்தியங்கள் வைக்கக் கூடாது.
– அவனிடமின்றி வேறு எவரிடமும் கையேந்திப் பிரார்த்தனைப் புரியக்கூடாது.
– ஒட்டு மொத்தமாக மனிதனின் முழுமையான அடிபணிதல் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே என்றிருக்க வேண்டும்.

என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

அல்லாஹ்வின் மீது இந்த வகையான அடிமைத்தனமும், கீழ்ப்படிதலும், கட்டுப்பட்டு செயலாற்றும் தன்மையும் வராதவரையில் ஒருவன் தன்னை முஸ்லிம் எனக் கூறிக் கொள்ள முடியாது.

## இறைவன் இருக்கின்றான்!

சில ஒழுக்கக் கோட்பாடுகளை மட்டும் கொண்ட மதங்களும், நவீன கொள்கைகளும் "இறைவன் உண்டா?" என்ற வேண்டாத வினாவை எழுப்பி, மக்களைத் தவறான வழிகளில் இட்டுச் செல்கின்றன. அவற்றின் இந்த கெடுதி மிக்க போதனைகளால் ஆவது ஒன்றுமில்லை ரூ மக்கள் கெட்டு குட்டிச்சுவராவதைத் தவிர!

"இறைவன் இருக்கின்றான்" என்பதற்கு இப்பிரபஞ்சமும், இதன் அமைப்பும், இவ்வமைப்புக்கு உட்பட்ட ஏனைய படைப்புகளின் இயக்கத்தன்மையும், மேற்காணும் வகையில் வினா விடுப்பவர்களது உடலமைப்பும், அதன் அற்புதமான செயற்பாடும் போதிய ஆதாரங்களாகின்றன. அறிவின்மை எனும் பூட்டுகளை உடைத்தெறிந்து, சிந்தனைக் கதவுகளைத் திறந்து விட்டால் இந்த உண்மை வெளிச்சத்திற்கு வரும்.

எதற்கும் ஓர் உதாரணத்தை பார்ப்போம்:

ஒரு மாமரத்தின் மறைந்த மறுபக்கம்..

ஒரு வித்திலிருந்து அது தனது பயணத்தை ஆரம்பிக்கின்றது.

பூமியில் ஊன்றப்பட்ட அவ்வித்து வேறு பல இயற்கைச் சக்திகளின் துணையுடன் பிரசவமொன்றுக்குத் தயாராகின்றது. சில நாட்கள் செல்கின்றன. ஒருநாள் அதிலிருந்து சின்னஞ்சிறிய செடியொன்று பிரசவித்து ரூ முளைத்து ரூ உலகை எட்டிப் பார்க்கின்றது. பிறகு, அது மெதுமெதுவாக வளர்ந்து கிளைகளும் இலைகளும் நிறைந்த பூரண மரமாகின்றது.

அதன் வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் கனி தரும் பருவத்தை அடைகின்றது. அப்பொழுது மரமெங்கும் இலைகளுக்கிடையில் அரும்புகள் தோற்றம் தருகின்றன. அவை பின்னர் மொட்டாகி, மலராகி, காய்கள் தோன்றி, அதிலும் படிமுறையான வளர்ச்சிகள் கண்டு, கனியாகி மனிதர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் சுவைத்துண்ணக் கொடுப்பதற்குத் தயாராகி விடுகின்றது.

எனினும், அந்த மாமரத்தின் வளர்ச்சி நிற்கவில்லை; தொடர்கிறது. கனி தரும் பணியும் அதற்குரிய காலங்களில் நடைபெறுகின்றது. குறிப்பிட்ட ஒரு எல்லைக்காலம் வந்ததும் அதன் வளர்ச்சி நின்று தளர்ச்சி ஏற்படுகின்றது. ஆனால், கனி தரும் உயரிய பணி மட்டும் நிற்கவில்லை. அது அதன் தளர்ச்சிக்குத் தக்கவாறு படிப்படியாகக் குறைந்துகொண்டு போகின்றது.

இப்படியான இதன் பயணத்தில்..

ஒருநாள் பாரிய பணியொன்றை நிறைவு செய்த திருப்தியுடன் அந்த மாமரம் பட்டுப்போகின்றது; செத்து விடுகின்றது.

அந்த மாமரத்தின் இந்த வாழ்க்கையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

– அந்த மாவிதையின் அமைப்பு
– அதிலிருந்து முளைத்த செடியின் தோற்றம்
– ஏனைய இயற்கை வளங்களான பூமி, நீர், காற்று, வெப்பம் போன்றவற்றின் ஒத்துழைப்பு
– அதன் உரிய பருவத்தில் நடைபெறும் கனி தரும் பணி
– குறித்த காலம் வந்ததும் – பணி முடிந்ததும் ரூ பட்டுப் போனமை

போன்ற யாவுமே தாமாக நடந்தனவா? இதை இந்த அமைப்பில் இயக்குபவன் – இறைவன் – என்றொருவன் இல்லையா? இந்த மாமரத்தின் வளரும் முறை, ஒழுங்கு, கனி கொடுக்கும் பருவம் பொன்றவற்றை நேருக்குநேர் பார்க்கும் நீங்கள், "இவற்றை ஒழுங்குற நடத்தி வைப்பவன் எவனும் இல்லை" என்று யாரோ கூறுவதை நம்புவீர்களா? அத்துடன், உங்கள் உள்ளம் அவ்வாறு நம்புவதில் ஒத்து வருகிறது என நீங்கள் உணர்கின்றீர்களா?

மேலும், மாமரத்தின் அமைப்பில் பாரிய வித்தியாசம் எதுவுமே தெரிவதற்கில்லை. ஆனால்,

– எத்தனை வகையான ரகங்கள்
– எத்தனை விதவிதமான வடிவங்கள்
– எவ்வளவு வித்தியாசமான, மதுரமான சுவைகள்!

இத்தனை ஏற்பாடுகளையும் செய்து, பல வகையான, பல்வேறு சுவையுடைய மாம்பழங்களை வழங்க வேண்டும் என்று அந்த மாமரமே நினைத்துக் கொண்டதா?

"இல்லை" என்பதுதான் இறைமறுப்பாளர் ஒருவரின் பதிலென்றால், "இத்தனை ஏற்பாடுகளையும் செய்தவன் யார்?" என நாம் அவரிடம் கேட்கலாம்.

"எதுவும் இல்லை. எல்லாம் இயற்கை" என்பதுதான் அவரது பதில் என்றால், "அந்த இயற்கையை, ஒழுங்கமைப்பைத் தனது அதிகாரத்தில் வைத்து இயக்கும் சக்தி எது?" என்ற மற்றொரு வினா எழுவதை அந்த மனிதன் தடுத்து, தட்டிக் கழித்து விட முடியாது.

அதற்கான இஸ்லாத்தின் விடை இதுதான்:

ஆழமான ஞானமும், நிகரில்லா பேராற்றலும் கொண்டு அம்மாமரத்தை மட்டுமல்ல, அகிலத்தையே ஓர் ஒழுங்கின்படி நடத்திச் செல்லும் அச்சக்தியின் பெயர் "அல்லாஹ்" என்பதாகும்!

அந்த அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வது இஸ்லாம் வேண்டி நிற்கின்ற பிரதான அம்சமாகும். இதுதான் இஸ்லாத்தின் ஆணிவேர். இந்த நம்பிக்கை இல்லாத எவரும் ஒருபோதும் முஸ்லிமாகி விட முடியாது.

உண்மையில் 'முஸ்லிம்' என்பது ஓர் இனத்தின் பெயரல்ல; ஒரு சாதியினது அல்லது ஒரு நாட்டவரது பெயரும் அல்ல. எவர்கள் அல்லாஹ்வை முழுமையாக நம்பி, அவனுக்கு வணக்க வழிபாடுகள் செய்து, அவன் கட்டளையிட்டபடி வாழ்கின்றனரோ அவர்களுக்குரிய பெயராகும். அவர்கள் எந்த நாட்டை, சமூகத்தை, இனத்தை, சாதியைச் சேர்ந்தவர்களாயினும் சரியே.

ஒரு நபித்தோழர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து 'அல்லாஹ்வின் தூதரே! வேறு எவரிடமுமன்றி உங்களிடம் மட்டும் தெரிந்துக் கொள்ளக் கூடியவாறு இஸ்லாத்தைப் பற்றி ஏதாவது சொல்லுங்கள்' என்றார்.

அதற்கு பதிலளித்த நபி (ஸல்) அவர்கள் 'நான் அல்லாஹ்வை நம்புகிறேன் என்று மொழிந்து, பின்னர் அதில் உறுதியாக நிலைத்து நில்லுங்கள்' என்றார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களது இந்த பதிலிலிருந்து இஸ்லாத்தில் இறைநம்பிக்கை எந்த அளவு முக்கியமானது எனப் புரிந்து கொள்ளலாம். உண்மையில், இறைநம்பிக்கை இல்லாத இடத்தில் இஸ்லாமே இல்லை என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இறைநம்பிக்கையைத் தொடர்ந்து நம்பிக்கை கொள்ள வேண்டிய ஏனைய அம்சங்களாவன:

– வானவர்கள்
– வேதங்கள்
– இறைத்தூதர்கள்
– மறுமைத் தினம்
– விதி எனும் இறை நிர்ணயம்

என்று விரிவடைந்து செல்லும். இவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளங்கிக் கொள்வது பயனுடையதே

# 38வது தமிழ்நாடு ஸ்டேட் அண்டர் 9 ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தமிழ்நாடு செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் மண்ணிவாக்கத்தில் உள்ள பெரி பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது

மண்ணிவாக்கம் மே.18

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த மண்ணிவாக்கத்தில் மே 13 2026 முதல் 17 வரை 38 வது தமிழ்நாடு 9 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தமிழ்நாடு செஸ் சாம்பியன்ஷிப் போட்டி மண்ணிவாக்கத்தில் உள்ள பெரி பொரியல் கல்லூரியில் மே 14 அன்று இரண்டாம் நாள் சதுரங்கப் போட்டிகளை தாம்பரம் மாநகராட்சி மூன்றாவது மண்டல தலைவர் லயன் ஜெய பிரதீப் சந்திரன் அவர்களும் கௌரிவாக்கம் பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரியின் வைஸ் சேர்மன் பிரசன்ன வெங்கடேஷ் ஆகியோர் இரண்டாம் நாள்




போட்டிகளை துவக்கி வைத்து மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் அவர்களுக்கு வெற்றி தோல்விகளை சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் அனைத்து மாணவர்களும் வெற்றி பெற தங்களுடைய வாழ்த்துக்களை கூறி

அவர்களை உற்சாகப்படுத்தினர். இதில் கல்லூரியின் முதல்வர் புருஷோத்தமன், செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐந்து நாட்கள் நடைபெறும் இந்தப் போட்டியில் தமிழ்நாடு முழுவதும் இருந்து 9 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண் களுக்கான சேம்பியன்ஷிப் போட்டிகளில் சுமார் 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு விளையாடி வருகின்றனர் . இதில் கலந்து கொள்ளும் செஸ் விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கும் உணவு தங்கும் வசதி மற்றும் பேருந்து வசதி ஆகியவை செங்கல்பட்டு சதுரங்க கழகத்தின் சார்பாக சிறப்பாக ஏற்பாடு செய்து தரப்பட்டுள்ளது.

இதில் மாணவர்கள் பெற்றோர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இங்கே தங்கி விளையாடி வருகின்றனர்.

இதில் விளையாடி வெற்றி பெற்று முதலிடம் பிடிக்கும் ஆண் மற்றும் பெண் இருவருக்கும் சாம்பியன்ஷிப் பட்டங்கள் வழங்கப்பட்டு பரிசுகளும் காத்துக் கிடக்கின்றன.

மேலும் முதலிடம் பிடிப்போர் அதில் அகில இந்திய அளவிலான நேஷனல் சாம்பியன்ஷிப் போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்

# பல்லாவரத்தில் நடைபெற்ற செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் மணிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட செயற்குழு கூட்டத்தில் முக்கிய தீர்மாணங்கள் நிறைவேற்றபட்டன

பல்லாவரம் மே.18

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட மணிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட செயற்குழு கூட்டம் வடக்கு மாவட்ட தலைவர் ஜாஹிர் உசேன் தலைமையில் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. செயற்குழு கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக மாநில துனைப் பொதுசெயலாளரும், மாமன்ற உறுப்பினருமான தாம்பரம் யாக்கூப், மாநில அமைப்பு செயலாளர் பழனிபாரூக், தலைமை பிரதிநிதி ஷாஜகான் கலந்து கொண்டு கட்சி வளர்ச்சி மற்றும் பேரிடர் காலங்களில் மணிதநேய மக்கள் கட்சி ஆற்றிய பணிகள் குறித்து சிறப்புரையாற்றி



3 1/2 சதவித இட ஒதுக்கீட்டை 5 சதவீத 'இட ஒதுகீடு செய்து தரவேண்டும், மோசட் 15, ஆண்டுகால வெள்ளை அறிக்கை வேண்டும், இஸ்லாமிய சிறைவாசிகளும், விடுதலை செய்ய பட வேண்டு, தாம்பரம் கஸ்தூரிபாய் நகர் பளிவாசல் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளி வாசல்களுக்கும் உள்ள பிரச்சனைகளும் தீர்க்கபட வேண்டும், தமிழ்நாடு முழுவதும் தமுமுக மமக சகோதரர்கள் மீது போடபட்டுள்ள பொய் வழக்குகள் மற்றும் சரித்திரபதிவேடு குற்ற வழக்கில் இருந்து விடுவிக்கபட வேண்டும், கட்சி வளச்சி குறித்தும் திமுக கூட்டணி கட்சிகள் தோல்வி குறித்து ஆய்வு செய்யபட்டு தோல்வியை கண்டு துவண்டு விட கூடாது உள்ளிட்ட தீர்மாணங்கள் நிறைவேற்றபட்டன. இதில் மணிதநேய மக்கள் கட்சி நிர்வாகிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

# கல்லா கட்டும் கருப்பு.. 2வது நாள் இப்போவே ஆல் ஷோஸ் ஹவுஸ்ஃபுல்.. சூர்யா சுனாமி

ஜெயிலர் மற்றும் லியோ படங்களுக்குப் பிறகு புக் மை ஷோ உள்ளிட்ட டிக்கெட் புக்கிங் தளங்களில் ஒரு மணி நேரத்துக்கு அதிக டிக்கெட்டுகள் முன்பதிவாகும் படமாக 3வது இடத்தில் தற்போது சூர்யாவின் கருப்பு படம் மாறியுள்ளது.

தமிழ்நாட்டில் மட்டுமின்றி ஆந்திரா, தெலங்கானா மற்றும் கேரளாவிலும் சூர்யா படத்தை ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். சிங்கம் 2 படத்துக்குப் பிறகு சூர்யா நடித்து வெளியான படங்கள் தியேட்டர்களில் பெருமளவில் ரசிகர்களை கவரவில்லை என்கிற குற்றச்சாட்டுக்களை ஆர்ஜே பாலாஜி இயக்கி நடித்துள்ள கருப்பு படம் முறியடித்துள்ளது.

முதல் நாளில் உலகளவில் 20 கோடி வசூல் செய்த நிலையில், 2வது நாளான இன்று அனைத்து தியேட்டர்களும் ஹவுஸ்ஃபுல் போர்டுகளை மாட்டத் தொடங்கியுள்ளன. பல தியேட்டர்கள் ஆரஞ்சு அலர்ட்டாக உள்ளது. நேற்று மாலை மற்றும் நள்ளிரவு காட்சிகளில் ரசிகர்கள் சாமியாட்டம் ஆடிய வீடியோக்கள் ஒட்டுமொத்த மக்களையும் குடும்பம் குடும்பமாக சூர்யா படத்தை பார்க்க வரவழைத்துள்ளது. கல்லா கட்டும் கருப்பு: காந்தாரா, ஹனுமான் என சிறு பட்ஜெட்டில் சாமியை வைத்து மற்ற மொழிகளில் எடுத்த படங்கள் எல்லாம் பெரிதாக பாக்ஸ் ஆபீஸில் கல்லா கட்ட ரன்பீர் கபூர், யஷ், சாய் பல்லவி நடிப்பில் பிரம்மாண்டமாக ராமாயணா படம் 2000 கோடி பட்ஜெட்டில் உருவாகி வருகிறது. மகேஷ் பாபுவை வைத்து ராஜமௌலி வாரணாசி படத்தை 1200 கோடி பட்ஜெட்டில் எடுத்து வருகிறார். கோலிவுட்டில் இப்படியெல்லாம் படங்கள் வெளியாகவில்லையே என ரசிகர்கள் ஃபீல் செய்துக் கொண்டிருந்த நிலையில், சரியான நேரத்தில் கருப்பசாமியை வைத்து சூர்யா நடித்துள்ள கருப்பு படம் பாக்ஸ் ஆபீஸில் மிகப்பெரிய கல்லா கட்ட ஆரம்பித்துள்ளது. முதல் நாளே உலகளவில் 20 கோடி வசூல் சாதனை செய்துள்ளதாக சாக்னிக் தெரிவித்துள்ளது.

2வது நாள் வசூல் கணிப்பு: ஏகப்பட்ட தியேட்டர்கள் இப்போதே சனி மற்றும் ஞாயிறுக்கான காட்சிகள் அரங்கு நிறைந்து காணப்படுகிறது. தனுஷின் கர, ரத்னகுமாரின் 29 உள்ளிட்ட படங்கள் ஓடிக் கொண்டிருந்த தியேட்டர்களும் தற்போது சூர்யாவின் கருப்பு படத்தை போட முடிவு செய்து கூடுதல் காட்சிகள் ஒதுக்கப்பட்டு வருகிறது. கங்குவா, ரெட்ரோ படங்கள் எல்லாம் முதல் நாளே திணறிய நிலையில், 2வது நாள் எல்லாம் பாக்ஸ் ஆபிஸில் பலத்த அடி வாங்கின. ஆனால், சூர்யாவின் கருப்பு படம் சுனாமி போல தியேட்டர்களை ஆட்சி செய்து வரும் நிலையில், 2வது நாள் உலக வசூல் அதிகபடியாக 30 முதல் 35 கோடி வரை வரும் என கணிப்புகள் வெளியாகி உள்ளன. 2 நாட்களில் 50 கோடி வசூலை ஒட்டுமொத்தமாக கருப்பு படம் கடக்கும் என்றும் ஞாயிற்றுக்கிழமையோடு சேர்த்தால் மிகப்பெரிய ஓபனிங் கிடைக்கும் என்கின்றனர். 200 300 கோடி வசூல்: சூர்யாவின் கருப்பு திரைப்படம் இதே வேகத்தில் இன்னும் ஒரு வாரம் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடினால் அதிகபட்சமாக 200 முதல் 300 கோடி வசூலை ஈட்டி சூர்யாவுக்கு பல வருடங்கள் கழித்து மிகப்பெரிய பாக்ஸ் ஆபீஸ் வெற்றியை ஈட்டித் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கருப்பு படத்தின் வெற்றி அடுத்து வெளியாகவுள்ள விஸ்வநாத் அண்ட் சன்ஸ் படத்துக்கும் பக்க பலமாக இருக்கும் என்றும் கூறுகின்றனர்.






## ரவிமோகனுடன் கெனிஷா பிரேக்அப்? சென்னையை விட்டு வெளியேறுவதாக உருக்கம்


கடந்த சில நாட்களாக சமூக வலைதளங்களில் ஆர்த்தி ரவி கெனிஷா தொடர்பான சர்ச்சைகள் எழுந்த நிலையில், தற்போது அதுகுறித்த நீண்ட விளக்கத்தை பாடகி கெனிஷா வெளியிட்டுள்ளார்.

2024ஆம் ஆண்டு தனது மனைவி ஆர்த்தியைப் பிரிவதாக நடிகர் ரவி மோகன் அறிவித்தார். அவருக்கும் கெனிஷாவுக்கும் இடையே காதல் இருப்பதாகப் பேசப்பட்டது. இருவரும் தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்று வந்தனர்.

சமீபத்தில் தரம்சாலாவில் நடைபெற்ற ஒரு கோயில் விழாவில் இருவரும் ஒன்றாகக் கலந்துகொண்டது பேசுபொருளானது. இதைத் தொடர்ந்து ஆர்த்தியின் ஆதரவாளர்களிடமிருந்து கெனிஷாவுக்கு சமூக வலைதளங்களில் கடுமையான விமர்சனங்கள் எழுந்தன.

இந்த விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக கெனிஷா இன்று வெளியிட்ட இன்ஸ்டாகிராம் பதிவில், "ஒரு மனிதரைக் காப்பாற்ற என்னையே நான் தியாகம் செய்தேன். ஆனால், இந்த உலகம் உண்மைக்கும் மென்மைக்கும் இடம் தராத ஒன்றாக இருக்கிறது. பொய் சொல்பவர்கள் மற்றும் ஏமாற்றுபவர்களுக்கே இங்கு இடம் உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.





## மவுனி ராயின் விவாகரத்துக்கு திஷா பதானிதான் காரணம்: ரசிகர்கள் கடும் சாடல்

நடிகை மவுனி ராய், சுராஜ் நம்பியார் ஆகியோர், தங்களின் விவாகரத்து முடிவை கூட்டாக அறிவித்துள்ளனர். அவர்கள் வெளியிட்டுள்ள பதிவில், 'எங்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் ஊடகங்கள் தேவையற்ற தலையீடு செய்வதை வருத்தத்துடன் கவனிக்கிறோம். நாங்கள் இருவரும் பிரிந்து செல்ல முடிவு செய்துள்ளோம்' என்று கூறியுள்ளனர். இந்த அறிவிப்பை தொடர்ந்து மவுனி ராய் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தின் கருத்து பகுதியை (கமென்ட் செக்ஷன்) முடக்கி வைத்துள்ளார்.

இதனால் அதிருப்தி அடைந்த ரசிகர்கள், மவுனி ராயின் பழைய போட்டோக்களின் கீழே கருத்துகளை குவித்து வருகின்றனர். குறிப்பாக மவுனி ராயின் தோழியும், நடிகையுமான திஷா பதானிதான் இந்த திருமண முறிவுக்கு காரணம் என்று பலர் குற்றம்சாட்டியுள்ளனர். மவுனி ராய், சுராஜ் நம்பியாருக்கு இடையே திஷா பதானிதான் பிரச்னையை ஏற்படுத்தியதாக ரசிகர்கள் கடுமையாக சாடுகின்றனர். 'மவுனி ராய், சுராஜ் நம்பியாருக்கு இடையே சண்டையை மூட்டிவிட்டது திஷா பதானிதான்' என்றும், 'விவாகரத்துக்கு பிறகு திஷா பதானிதான் புதிய மனைவியா' என்றும் ரசிகர்கள் விமர்சித்து வருகின்றனர்.



## உங்க விவகாரத்துல என்னை இழுப்பதா? ஆர்த்தி மீது கெனிஷா சாடல்

விமோகனின் மனைவி ஆர்த்தி பாடகி கெனிஷா மீது அவதூறு வழக்கு வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதி மன்றம், கெனிஷா சமூக வலைத்தளங்கள் உட்பட எந்த ஊடகத்திலும் ஆர்த்தி குறித்துப் பேசுவதற்குத் தடை விதித்து உத்தரவிட்டது. இந்நிலையில், கெனிஷா உருக்கமான வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "என்னைப் பற்றி அவதூறு பேசும் உங்கள் யாருக்கும், என்னைப் பற்றி எதுவும் தெரியாது. நான், எனது இளம் வயதிலேயே தாய் தந்தையை இழந்துவிட்டேன்.

என்னுடைய சிறுவயதிலேயே உறவினர்களால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டேன். 19 வயதில் எனக்குத் திருமணம் ஆனது. எனது கணவர் என்னைக் கொடுமைப்படுத்தினார். அவர் என்னைத் தாக்கியதில் எனது வயிற்றில் இருந்த 4 மத குழந்தை கருவிலேயே கலைந்துவிட்டது. அப்போது, எனது அடிவயிற்றில் ரத்தம் வழிந்தது. நான் எனது வாழ்க்கையில் அப்பா, அம்மா மற்றும் குழந்தை என அனைவரையும் இழந்துவிட்டேன்.

இதிலிருந்து மீண்டு வருவதற்கே பல போராட்டங்களைச் சந்தித்தேன். அப்படியிருக்கும் போது நான் எப்படி இன்னொரு குடும்பத்தைக் கெடுக்க நினைப்பேன்? ரவி மோகன் ஒன்றும் குழந்தை இல்லை. அவரது வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும்? என்பதை முடிவெடுப்பவர் அவர் தான். அப்படி இருக்கும் போது இந்த விவகாரத்தில் என்னை ஏன் இழுக்கிறீர்கள்? சமூகத்தில் ஏராளமான பிரச்சனைகள் உள்ளன. அவற்றைப் பற்றிப் பேசுங்கள்" என்று தெரிவித்துள்ளார்.

## 500 சிலம்ப மாணவர்கள் நடிக்கும் படம்



லட்சுமி நாராயணா பிலிம்ஸ் தயாரிப்பில் தமிழர்களின் பாரம்பரிய கலையான சிலம்ப கலையை போற்றும் விதமாகஸ்டண்ட் மாஸ்டர் டிஆர்.ஏ.கே.எஸ். ஜோதி தயாரித்து இயக்கி நடிக்கும் படம் 'சிலம்பம்'. இதில் அறிமுக நாயகனாக சிலம்ப மாஸ்டர் அஜித்குமார் நடிக்க நாயகியாக மௌனிகா வில்லனாக ஹரிஷ், கதையின் நாயகியாக ஆதி நடிக்க ப்ரதிஷா, தீனா, மகாநதி சங்கர், என் உயிர் தோழன் ரமா, சுமா தேவி மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். சிலம்பம் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா பல முன்னணி நட்சத்திரங்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் முன்னிலையில் இன்று நடைபெற உள்ளது. மே மாதம் இறுதியில் இத்திரைப்படம் திரைக்கு வர இருக்கிறது. படத்தைப் பற்றி இயக்குனர் ஜோதி கூறுகையில், "நமது பாரம்பரிய கலையான சிலம்பாட்டத்தை நேசிக்க துடிக்கும் ஒவ்வொரு மாணவர்களிடமும் சிலம்பக் கலையை இது ஊக்குவிக்கும் ஒரு படமாகவும் அதே கணம் சிலம்ப போட்டியில் நடக்கும் அரசியல் சூழ்ச்சிகளை தோலுரிக்கும் படமாகவும் இருக்கும். இதில் 500 நிஜ சிலம்ப மாணவர்கள் நடிக்கிறார்கள்" என்றார்.

# தேனி மாவட்டத்தில் சட்டவிரோத மது விற்பனையைத் தடுக்க எஸ்பி அதிரடி நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை!

## தனிப்படை அமைத்து கயவர்களைக் கைது செய்ய சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தல்

தேனி, மே.18-

தேனி மாவட்டத்தின் பல்வேறு கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்டு வரும் சமூக விரோதிகள் மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (SP) அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள், மாநிலத்தின் சில பகுதிகளில் மதுக்கடைகளை அதிரடியாக மூடி உத்தரவிட்டிருப்பது பொதுமக்களிடையே பெரும் மகிழ்ச்சியையும், வரவேற்பையும் பெற்றுத் தந்துள்ளது. அரசின் இந்த நற்செயலால் மக்கள் பெருமிதம் அடைந்துள்ளனர்.

இருப்பினும், இந்தச் சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொள்ளும் சில சமூக விரோதிகள், ஆங்காங்கே



மதுக்கடைகளில் மொத்தமாக மதுபாட்டில்களை வாங்கிக் கொண்டு, தேனி மாவட்டத்தின் முடுக்குகளிலும், கிராமப்புறங்களின் மறைவிடங்களிலும் சட்டவிரோதமான முறையில் அமோகமாக விற்று வருகின்றனர். இதனால், பல குடும்பங்களின் வாழ்வாதாரமும், இளைஞர்களின் எதிர்காலமும் சீரழியும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

தனிப்படை அமைக்கக் கோரிக்கை சட்டவிரோத மது விற்பனையால் ஏற்படும் சட்டம்ஒழுங்குப் பிரச்சினைகளைத் தடுக்க, தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உடனடியாக தலையிட்டு, தனிப்படை (Special Team) அமைத்து தீவிரக் கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும். இதற்கு உறுதுணையாக இருக்கும் கயவர்களைக் கண்டறிந்து அதிரடியாகக் கைது செய்ய வேண்டும் என அனைத்துத் தரப்பு மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு அதேபோல், புதிதாகப் பொறுப்பேற்றுள்ள உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர்களும் (MLAs) இத்தகைய சமூக விரோதச் செயல்களைத் தடுக்க களத்தில் இறங்கி, உரிய அதிகாரிகளுக்கு அழுத்தம் தந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் தங்களது கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இத்தகைய அதிரடி நடவடிக்கைகள் மூலமே தேனி மாவட்டத்தில் உள்ள ஏழை, எளிய குடும்பங்களும், இளைஞர்களின் வாழ்க்கையும் மேம்படும் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

# பருவநிலை மாற்றத்தால் ஏரிகளில் மீன்கள் செத்து மிதப்பு; பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்த எம்.எல்.ஏ முகுந்த் பாண்டியன்

## 10 நாட்களில் அறிக்கை தாக்கல் செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவு

கிருஷ்ணகிரி, மே.18-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்குட்பட்ட சிவனாபுரம் எல்லுகுட்டை ஏரி, குரும்பட்டி ஏரி, வவ்வால் தோப்பு புதூர் ஏரி, கொள்ளுப்பட்டி ஏரி, வாடமங்கலம் ஏரி உள்ளிட்ட பல்வேறு ஏரிகளில் பருவநிலை மாற்றம் மற்றும் ஆக்சிஜன் பற்றாக்குறை காரணமாக சுமார் 60 டன்னுக்கும் மேற்பட்ட மீன்கள் நீரில் செத்து மிதந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



இந்த சம்பவம் தொடர்பாக இன்று அனைத்து முக்கிய பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளில் விரிவான செய்திகள் வெளியாகிய நிலையில், தகவல் அறிந்த கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்த் பாண்டியன் பாதிக்கப்பட்ட ஏரிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது மீன் வளத்துறை மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளிடம் சம்பவம் குறித்து விளக்கங்களை கேட்டறிந்த அவர், பாதிக்கப்பட்ட அனைத்து ஏரிகளிலும் உடனடியாக நீர் மாதிரிகளை சேகரித்து ஆய்வு செய்ய வேண்டும் என உத்தரவிட்டார். மேலும், கிருஷ்ணகிரி நீர்த்தேக்க அணையின் நீர், அணைக்கு வரும் நீரின் நுழைவுப் பகுதிகள் உள்ளிட்ட இடங்களிலும் நீர் மாதிரிகள் சேகரித்து விரிவான ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் முழுமையான அறிக்கையை 10 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு எம்.எல்.ஏ முகுந்த் பாண்டியன் கடுமையாக அறிவுறுத்தினார். மீன்வளத்துறை மாவட்ட துணை இயக்குனர் ரத்தினம் தலைமையிலான அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

மீன்வளத்துறை சார்பு ஆய்வாளர் பிரபு, மாசுக்கட்டுப்பாட்டு வாரிய உதவி செயற்பொறியாளர் சிலம்பரசன் கிருபா ஆகியோர் சம்பவ இடங்களில் நீர் மாதிரிகளை சேகரித்து ஆய்விற்காக எடுத்துச் சென்றனர்.

இந்த ஆய்வின்போது தவெக மேற்கு ஒன்றிய செயலாளர் விஜயகுமார், நகர செயலாளர் தமிழ் குமரன் உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் உடன் இருந்தனர்.

# முடிவுற்ற சாலைப் பணிகள் தர ஆய்வு; நெடுஞ்சாலைத்துறை உள் தணிக்கை குழுவினர் ஆய்வு

கிருஷ்ணகிரி, மே.18-

நெடுஞ்சாலைத்துறை கிருஷ்ணகிரி கோட்டம், கிருஷ்ணகிரி க(ம)ப உட்கோட்டத்தில் முடிவுற்ற சாலைப் பணிகளின் தரத்தை ஆய்வு செய்யும் வகையில், சாலை தடிமன் ஆய்வு மற்றும் சாலை மைய உயர்ச்சி சோதனை ஆகியவை நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டது.



இந்த ஆய்வினை சேலம் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கண்காணிப்பு பொறியாளர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. ஆய்வில் கிருஷ்ணகிரி கோட்ட பொறியாளர் லோகசந்தர், கோட்ட பொறியாளர் அகிலா, உதவி கோட்ட பொறியாளர்கள் கோவிந்தசாமி, அன்புஎழில், நந்தகுமார், உதவி பொறியாளர் அன்பரசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் சாலை ஆய்வாளர்கள் மற்றும் சாலைப் பணியாளர்களும் உடனிருந்து ஆய்வு பணிகளில் ஈடுபட்டனர். இந்த ஆய்வின் மூலம் முடிவுற்ற சாலைப் பணிகளின் தரநிலைகள் மற்றும் தொழில்நுட்ப அம்சங்கள் பரிசோதிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.





# கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரியில் அடிப்படை வசதிகள் குறித்து எம்.எல்.ஏ.ஆய்வு

கிருஷ்ணகிரி, மே.18-

கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்த் பாண்டியன் அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது மருத்துவக் கல்லூரியின் முதல்வர் சத்யபாமாவிடம், கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு தேவையான அடிப்படை வசதிகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் நோயாளிகளுக்கான சேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து, மருத்துவக் கல்லூரியின் 7வது மாடிவரை சென்று குடிநீர் நீர்த்தேக்க தொட்டியை பார்வையிட்டு ஆய்வு செய்த அவர், குடிநீர் தொட்டிகளை 15 நாட்களுக்கு ஒருமுறை சுத்தம் செய்து, நோயாளிகளுக்கு தூய்மையான மற்றும் சீரான குடிநீர் வழங்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும், பொது மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகள் வழங்க தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



# ஆற்காடு அரசு மருத்துவமனையை எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார்

ராணிப்பேட்டை, மே.18-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு கஸ்பா பகுதியில் இயங்கி வரும் அரசு மருத்துவமனையில் புதியதாக சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பேற்று இருக்கும் எஸ் எம் சுகுமார் ஆய்வு மேற்கொண்டார். மருத்துவமனையில் போதிய படுக்கை வசதி உள்ளதா என்றும் மருந்துகள் முறையாக வழங்கப்படுகிறதா என்றும் உள்நோயாளி பிரிவில் தங்கி இருக்கும் நோயாளிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படுகிறதா என்றும் கேட்டு அறிந்தார். சமையல் கூட ஆய்வு செய்த சட்டமன்ற உறுப்பினர் எஸ் எம் சுகுமார் அங்கு சமைத்து வைத்திருந்த உணவு தரமாக உள்ளதா என்று ருசித்துப் பார்த்து பரிசோதனை செய்தார். அப்போது மருத்துவர் போதிய அளவு இல்லை என்ற குற்றச்சாட்டிற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு புதிய மருத்துவமனை கட்டித்தர விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். உடன் மருத்துவர்கள் செவிலியர்கள் பணியாளர்கள் உடனே இருந்தன.

# தெங்கால் கிராமத்தில் தபசு மரம் ஏறுதல் நிகழ்ச்சி!

ராணிப்பேட்டை, மே.18-

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா தாலுக்கா, தெங்கால் கிராமத்தில் எழுந்தருளி அருள்பாளித்து வரும் அருள்மிகு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய அக்னி வசந்த விழா விமர்சையாக நடைபெற்றது. கடந்த 06 தேதி கொடியேற்றுதல் நிகழ்ச்சியுடன் துவங்கி தினந்தோறும் ஆரணி புலவன்பாடி, விபூதி வள்ளல் மாணவர், பிரசங்க திலகம், இசைமணி ராம கார்த்திகேயன் அவர்களால் மகாபாரத சொற்பொழிவும், ஆரணி சிவா அம்மு நாடக மன்றம், சேத்துப்பட்டு நம்பேடு வேம்புலி அம்மன் நாடக கட்டைக்கூத்து நிகழ்ச்சியும் நடைபெற்று வந்த நிலையில் நேற்று தபசு ஏறுதல் நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது. முன்னதாக பால், தயிர், சந்தனம், விபூதி, இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு ஸ்ரீ திரௌபதி அம்மனுக்கும், தர்மராஜருக்கும் சிறப்பு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு தீபா ஆராதனையும் நடைபெற்றது. இதில் சுமார் 2000க்கும் மேற்பட்ட பக்தர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு தபசு ஏறுதல் நிகழ்ச்சியை கண்டு சென்றனர். குழந்தை பேரு இல்லாதவர்கள் தபசு மரத்தில் தொட்டில் கட்டி தங்கள் வேண்டுதலை நிறைவேற்றினர். இறுதியில் அனைவருக்கும் ஆலயத்தின் சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியை நாட்டான்மைதாரர்கள், விழா குழுவினர்கள், ஊர் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# சாத்தூர் தொகுதியில் த.வெ.க.,வில் வெடித்தது கோஷ்டி மோதல்

## மாறி, மாறி போஸ்டர் யுத்தம்

சாத்தூர், மே.18-

சாத்தூர் தொகுதியில் தவெக கோஷ்டி மோதல் உச்சகட்டத்தில் உள்ளது. விருதுநகர் மத்திய தவெக மாவட்ட செயலாளர் சின்னப்பர். சாத்தூரை சேர்ந்த இவர் ஆட்டோ டிரைவராக உள்ளார். மாவட்ட இணை செயலாளர் அஜித். இவர்களிடையே ஆரம்பம் முதலே கோஷ்டி மோதல் இருந்து வருகிறது. குறிப்பாக ஆலோசனை கூட்டம், தெருமுனை பிரசாரம் உள்ளிட்டவை நடைபெறும் போது, அஜித் தரப்பிற்கு மாவட்ட செயலாளர் சின்னப்பர் முறையாக அழைப்பு விடுப்பதில்லை என கூறப்படுகிறது. இதனால் அஜித் ஆதரவாளர்கள், மாவட்ட செயலாளரிடம் மேடையிலேயே வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவங்கள் அடிக்கடி நடந்து வந்தன.

சாத்தூர் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட மாவட்ட செயலாளர் சின்னப்பர் காய் நகர்த்தி வந்தார். தவெக தலைமை அவருக்கு சீட் வழங்காமல் இணை செயலாளரான அஜித்திற்கு வழங்கியது. இதனால் ஆத்திரமடைந்த சின்னப்பர், தேர்தலில் அஜித்திற்கு ஆதரவாக வேலை செய்யாமல் இருந்தாக கூறப்படுகிறது. சாத்தூர் தொகுதியில் திமுக வேட்பாளர் கடற்கரைராஜ் வெற்றி பெற்றார். தவெக வேட்பாளர் அஜித் தோல்வியடைந்து மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டார். இதனால் அதிருப்தியடைந்த அஜித், தலைமையிடம் சின்னப்பரின் செயல்பாடு குறித்து குமுறியுள்ளார்.

இதையடுத்து தவெக தலைமை சின்னப்பரை, மாவட்டச் செயலாளர் பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுத்து வருவதாக கூறப்படுகிறது. ஆனால் இதற்கு அசைந்து கொடுக்காத சின்னப்பர், சாத்தூர் தொகுதியில் தனக்கே அதிக செல்வாக்கு இருப்பதுபோல் காட்டுவதற்காக, திரும்பும் பக்கம் எல்லாம், விஜய்யை வாழ்த்தி போஸ்டர்கள், பேனர்கள் வைத்துள்ளார். இதில் இணை செயலாளர் அஜித்தின் புகைப்படம் இல்லை. இதற்கு போட்டியாக அஜித்தின் ஆதரவாளர்களும் சின்னப்பரின் புகைப்படம் இல்லாமல் சாத்தூர் தொகுதியில் பேனர் வைத்து வருகின்றனர். இதனால் சாத்தூர் தொகுதியில் யார் பக்கம் இருப்பது என்று தெரியாமல் நிர்வாகிகள், தொண்டர்கள் பெரும் குழப்பத்தில் உள்ளனர்.



# தமிழக விவசாயிகள் விழிப்புணர்வு சங்கத்தின் மாநில சிறப்புக் கூட்டம்

கிருஷ்ணகிரி, மே.18-

கிருஷ்ணகிரியில் தமிழக விவசாயிகள் விழிப்புணர்வு சங்கத்தின் மாநில சிறப்புக் கூட்டம் நடந்தது. மாநில தலைவர் நசீர்அகமது தலைமை தாங்கினார். மாநில செயலாளர் ராஜா, மாநில மகளிர் அணி தலைவி சக்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில், கிருஷ்ணகிரியில் வருகிற ஜூலை மாதம் 5ம் தேதி உயர்தியாகம் செய்த விவசாயிகள் நினைவாக பேரணி நடத்துவது. நிகழாண்டில் மா விளைச்சல் குறைந்துள்ளதால் மாவிற்கு கிலோ ஒன்றுக்கு ரூ.10 ஊக்கத் தொகை வழங்க வேண்டும். மாந்தோப்பு வைத்துள்ள விவசாயிகளுக்கு வருடாந்திர மா தொகுப்பாக தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.25ஆயிரம் வழங்க வேண்டும். பால் உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் அதிகரிக்க வேண்டும். அதன்படி பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.45ம், எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.60க்கு, உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி மானியமாக லிட்டருக்கு ரூ.6 வழங்க வேண்டும். காட்டுப்பன்றி, யானைகள், மயில் உள்ளிட்ட வனவிலங்குகளாக ஏற்படும் பயிர் சேதங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1 லட்சம் வழங்க வேண்டும். யானைகளால் ஏற்படும் மனித உயிர் சேதத்திற்கு ரூ.25 லட்சம் வழங்க வேண்டும். தென்னை கொப்பரையில் இருந்து எண்ணெய் தயாரித்து, அதனை அரசு கொள்முதல் செய்து நுகர்பொருள் வாணிப கழகம் முதல் நியாயவிலை கடைகள் மூலமாக வழங்க வேண்டும். பயிர் கடன் தள்ளுபடி செய்து, புதிய பயிர் கடன் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில், மாநில துணைத் தலைவர்கள் கணேசன், தணிகாசலம், மாவட்ட நிர்வாகிகள் மணிமேகலை, முருகேசன், குமார், பரசுராமன், ஜெயபால், லட்சுமணன், திருப்பதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ தமிழக வெற்றிக் கழகம் நீலகிரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ரமேஷ் நீலகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பாமா ரமேஷ் அவர்களின் வழிகாட்டுதல்படி குன்னூர் மேற்கு நகர செயலாளர் பிரகாஷ் கோரிக்கை வைத்தத ஓட்டி குன்னூர் யோகேஷ் மதுபான கடை மூடப்பட்டது. இது தமிழக வெற்றி கழகம் குன்னூர் நகரத்திற்கு கிடைத்த முதல் வெற்றி. இதை மகிழ்விக்கும் விதமாக இன்று குன்னூர் நகர மகளிர் அணி சார்பில் குன்னூர் நகர பிளாக் மகளிர் அணி அமைப்பாளர் அமல் போர்ஷியா தலைமையில் நிர்வாகிகள் பொருளாளர் ஆனி அந்தோணி மற்றும் இணை அமைப்பாளர்கள் திவ்யா அனிதா சுமதி ஜெபினா சுமதி ராணி. இந்நிகழ்வில் கலந்து கொண்டு குன்னூர் நகரில் மக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி சிறப்பித்தனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161